தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 3, பிரமோதூத—திருவள்ளுவர் ஆண்டு 2021

1990 ஏப்ரல் 16, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

‘‘ பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்
தீப்பிணி தீண்டல் அரிது ’’

தாம் பெற்ற உணவைப் பலரோடு பகுத்துண்ணும் பழக்கம் உடையவனைப் பசியென்று கூறப்படும் தீய நோய் அணுகுவது இல்லை.

1, வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

தமிழ்நாடு பரிசுச் சீட்டு விற்பனை

* 2215 திரு. சோ. பால்ராஜ் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு பரிசுச் சீட்டு விற்பனையைப் பெருக்குவதற்கான திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

(அ) ஆம்

(ஆ) தமிழ்நாடு பரிசுச்சீட்டு விற்பனையைப் பெருக்கும் நோக்கத்துடன் தனியார் பரிசுச்சீட்டுகள் தமிழ்நாட்டில் விற்பனை செய்வதை அரசு தடை செய்துள்ளது. மேலும் தமிழ்நாடு அரசு பரிசுத்திட்டத்தை மாற்றியமைத்து, ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

திரு. சோ. பால்ராஜ் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு பரிசுச் சீட்டு விற்பனையைப் பெருக்குவதற்கு என்னென்ன மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன? சிறப்புப் பரிசுக் குலுக்கலில் முதல் பரிசு தற்போது கொடுப்பது போலவும், 2-வது, 3-வது பரிசுகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி அதிகமான மக்கள் பயன்படும்படி மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அன்புடன் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தற்போது தமிழ் மகள் குலுக்கலில் முதல் பரிசாக ரூபாய் 10 லட்சம் என்று இருந்ததை 25 லட்சம் ரூபாயாகவும், மாதக் குலுக்கலில் ரூபாய் 25 லட்சம் முதல் பரிசு என்று இருந்ததை 35 லட்சம் ரூபாயாகவும், விழாக்களுக்கான குலுக்கலில் முதல் பரிசு ரூபாய் 35 லட்சம் என்று இருந்ததை ரூபாய் ஒரு கோடியே ஒரு லட்சமாகவும் மாற்றியமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் வருகிற மே திங்கள் முதல் செயல்படுத்தப்படும்.

திரு. சோ. பால்ராஜ் : தலைவர் அவர்களே, வெளி மாநில பரிசுச் சீட்டு விற்பனை ஏன் தடை செய்யப்பட்டது ? தடையை நீக்கிட அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ? தனியார் பரிசுச் சீட்டு விற்பனையைத் தடை செய்த பிறகு கடந்த 5, 6 மாதங்களில் வருமானம் உயர்ந்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 4, 5 கேள்விகளைச் சேர்த்துக் கேட்கிறார். ஏன் தடை செய்யப்பட்டது என்று கேட்டுவிட்டு, தடையை நீக்க என்ன செய்யப்பட்டது என்றும் கேட்கிறார். தடை செய்யப்பட்டதில் இந்த அரசு உறுதியாக இருக்கவே விரும்புகிறது. ஆனால் தடை செய்ததை நீதிமன்றத்திற்குச் சென்று சிலர் இப்போது இடைக் காலத் தடை அதற்குப் பெற்று இருக்கிறார்கள். வெளி மாநில பரிசுச் சீட்டுகளைத் தடை செய்வதற்கான நோக்கம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது. இருந்தாலும் திரும்பவும் சொல்கிறேன். பிற மாநிலங்களால் அனுமதிக்கப்பட்ட தனியார் பரிசுச் சீட்டுகளில் எண்ணற்ற முறைகேடுகள் உள்ளதாக அரசுக்குத் தெரிய வந்தது. ஏனைய மாநிலங்களாலும், பரிசுச் சீட்டு அமைப்பாளர்களாலும் ஒரு வாரத்தில் சுமார் 129 பரிசுச் சீட்டுகள் நடத்தப்பட்டு வருகின்றன எனவும், இவற்றில் ஒவ்வொரு குலுக்கலிலும் சுமார் 5 லட்சம் பரிசுச் சீட்டுகள் தமிழ் நாட்டில் விற்பனை செய்யப்படுகின்றன எனவும் தெரிய வந்தது. இந்தத் தோராய மதிப்பீட்டின்படி தனியார் பரிசுச் சீட்டுகள் ஒவ்வொரு ஆண்டும் 500 கோடி ரூபாய் மதிப்புடைய ஏனைய மாநில அரசுச் சீட்டுகள் தமிழ்நாட்டில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. 1988–89 கணக்குப்படி தமிழ்நாடு பரிசுச் சீட்டு—மாநில அரசு பரிசுச் சீட்டு 8 கோடி ரூபாய்க்கு விற்று இருக்கிறது. ஏனைய மாநில அரசுகள் நடத்துகிற பரிசுச் சீட்டு தமிழ் நாட்டில் 47 கோடி ரூபாய்க்கு விற்று இருக்கிறது. ஏனைய மாநில அரசுகளால் அங்கீகரிக்கப்பட்டு தனியார் நடத்துகிற பரிசுச் சீட்டுகள் தமிழ்நாட்டில் மட்டும் 453 கோடி ரூபாய்க்கு விற்கப்பட்டிருக்கிறது. இதை எண்ணிப் பார்த்துதான் தனியார் பரிசுச் சீட்டுகளுக்கு, வேறு மாநில அரசுகளால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பரிசுச் சீட்டு

1990 ஏப்ரல் 16]

களுக்கும் நாம் தடை விதித்து இருக்கிறோம். ஆனால் சில மாநிலங்களில் விற்பனையாளர்களுக்கு, தனியார்களுக்கு அவர்களிடத்தில் ராயல்டி பெற்றுக்கொண்டு, அவர்களுக்கு அந்த உரிமையைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் நடத்துகிற பரிசுச் சீட்டையும் நாம் தடுத்து இருக்கிறோம். அத்தகைய நிலையில்தான் அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று, இந்தத் தடையாணையைப் பெற்று இருக்கிறார்கள். எல்லோருக்கும் தடையாணை கொடுப்பது சுலபமாக இருக்கிற காரணத்தால் கிட்டத்தட்ட 450 கோடி ரூபாய் தமிழ் நாடு பணம், வெளி மாநிலங்களிலிருந்து, தனியார்களுடைய இந்தப் பரிசுச் சீட்டுகளாக விற்பனையாகிற நிலையை நாம் தடுக்க முடியாமல் அத்தகைய சூழ்நிலையில் இருக்கிறோம்.

9—05 மணி

திரு. எம். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு, வெளி மாநில பரிசுச் சீட்டுகளை தடை செய்து எப்போது ஆணையிட்டது ? அது இப்போது எந்த நிலையில் இருக்கிறது என்பதைத் தமிழக முதல்வர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அரசு ஆணை எண். 1101, நிதித்துறை ஆணை, 6—10—1989-ல் தனியார் பரிசுச் சீட்டுகளை தமிழ்நாட்டில் விற்பனை செய்வதைத் தடை செய்து ஆணை பிறப்பிக்கப் பட்டது.

திரு. எம். அண்ணாமலை : பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழ்நாடு பரிசுச் சீட்டும் சரி, வேறு மாநில பரிசுச் சீட்டானாலும் சரி, பொது மக்களிடையே பல் வறு, அதாவது முறைகேடான வழியில் பரிசுச் சீட்டுகளை போலித் தனமாக வெளியிடுவதாக ஒரு பெரிய அச்சம் ஏற்பட்டுள்ளது. இது அரசுக்குத் தெரியுமா ? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அத்தகைய தவறுகள் நடைபெறாமல் தடுப்பதற்காகவும், தனியார் இதிலே பெரும் கொள்ளை அடிப்பதைத் தடுத்து நிறுத்துவதற்காகவும்தான் மாநில அரசுகள் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு மாநில அரசுகள் நேரடியாக நடத்துகின்ற பரிசுச் சீட்டுகளை மாத்திரம்தான் இங்கே அனுமதிப்பது என்று முடிவு எடுத்து, குறிப்பாக தமிழ்நாடு, கேரளா, மராட்டியம், கர்நாடகம், உத்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகிய இந்த ஆறு மாநிலங்கள் நடத்துகின்ற பரிசுச் சீட்டுதான் தமிழ்நாட்டிலே விற்பனையாகலாம், வேறு மாநிலங்

களில் தனியாருக்குத் தரப்பட்டு இருக்கிற உரிமைகளின் அடிப்படையிலோ அல்லது தனியாரிடம் ராயல்டி பெற்றுக் கொண்டு, அவர்களுக்கு மாநில அரசுகள் தந்திருக்கிற அந்த உரிமங்களின் அடிப்படையிலோ இங்கே விற்பனையாவதை இந்த அரசு விரும்பவில்லை. ஆனால் இப்போது அவர்கள் நீதிமன்றத்திலே இடைக்கால தடையாணை பெற்றிருக்கிற காரணத்தால், நாம் கருதியதை உடனடியாக நிறைவேற்ற இயலவில்லை.

திரு. அன்பில் பொய்யாமொழி : பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களைப் போல, தமிழக அரசு தினந் தோறும் பரிசுக் குலுக்கல்களை நடத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட திட்டம் ஏதும் அரசுக்கு இப்போது இல்லை.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6—10—1989-ல் வெளி மாநிலங்களுடைய பரிசுச் சீட்டுகளுக்குத் தடை விதித்திருந்தாலும், பிப்ரவரி 1990-ல் தமிழகத்திலே லட்சக்கணக்கான அளவிலே பரிசுச் சீட்டை கைப்பற்றியுள்ளதாகவும் தகவல் அறிந்தோம் பத்தி ரிகை வாயிலாக. அவர்கள் மீது, அப்படிக் கள்ளத்தனமாக விற்றவர்கள் மீது என்ன நடவடிக்கை அரசு எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தால், அந்த நடவடிக்கைகள் தொடரும்.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஓர் ஆண்டுக் காலத்தில் பரிசுச் சீட்டு விற்பனை மூலம் தமிழக அரசு பெற்ற பணம் எவ்வளவு என்பதையும், இந்தப் பரிசுத் திட்டத்தின் மூலமாகப் பெறுகிற வருமானத்திலிருந்து தமிழகத்தில் என்னென்ன நல்வாழ்வுத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்தத் தனியார் பரிசுச் சீட்டுகளுக்குத் தடை விதிப்பதற்கு, அதாவது 5 மாதங்களுக்கு முன்பு வருமானம் 1 கோடியே 15 லட்சமாக இருந்தது. ஐந்து மாதங்களுக்குப் பிறகு இந்தத் தடை விதிக்கப்பட்ட பிறகு 1 கோடியே 75 லட்சமாக உயர்ந்தது.

1990 ஏப்ரல் 16]

அதாவது ஏறத்தாழ 60 லட்சம் ரூபாய் உயர்ந்தது. மேலும் அதிகமாக உயர்ந்திருக்கக் கூடும். அதற்குள்ளாக நீதிமன்றத்தினுடைய இடைக்காலத் தடை குறுக்கிட்டுவிட்டது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முகவர்களுக்கு இன்னும் ஊக்கத்துடன் பரிசுச் சீட்டுகளை விற்பனை செய்ய, அரசு ஏதாவது ஊக்க போனஸ் அளிக்க திட்டமிட்டுள்ளதா ? பரிசுத் தொகையினை மேலும் உயர்த்தும் எண்ணம் அரசிடம் உள்ளதா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழ் மகள் பரிசுச் சீட்டு விலை 2 ரூபாயாகவும், மாவட்ட சிறப்புக் குலுக்கல்கள் பரிசுச் சீட்டு 3 ரூபாயாகவும், மற்றும் பண்டிகைக் காலத்தில் நடத்தப்படுகிற பரிசுச் சீட்டுகளினுடைய விலை 5 ரூபாயாகவும் இருக்கிறது. முகவர்களுக்கு ஏற்கெனவே இருந்த கமிஷன் தொகை இப்போது 20-லிருந்து 22 வரையிலே உயர்த்தப்பட்டு இருக்கிறது.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசுச் சீட்டுகள் சம்பந்தமாக மத்திய அரசு சில வழிமுறைகளை ''கைட்லைன்ஸ்களை'' வகுத்து எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பியிருக்கிறது. அந்த வழிமுறைகள் நம்முடைய மாநில பரிசுச் சீட்டு திட்டத்திலேயும் பின்பற்றப்படுவதில்லை என்று 'சி. அண்ட் ஏ. ஜி.' (கணக்குத் தணிக்கையாளருடைய) அறிக்கையிலே குறிப்பிடப்படுகிறது. அந்த வழிமுறைகளை எல்லா மாநிலங்களும் கறாராகப் பின்பற்றுவதற்கு மத்திய அரசை அணுகி ஏற்பாடு செய்ய அரசு உத்தேசித்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

9–10 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற குறைபாடு ஒருவேளை கடந்த காலத்தில் இருந்திருக்கலாம். அந்த வழிமுறைகளைப் பின்பற்றாமல் புது முறையிலே நடத்த வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனைப்படி மைய அரசின் சார்பாக ஒரு ஒருங்கிணைப்பு முறையில் நடத்துவதற்கு அவர்கள் முன்வருவார்களேயானால் அதற்கான ஆலோசனைகளை மாநில அரசு தெரிவிக்கும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக அரசு 1976-க்கு முன் நடைபெற்ற நேரத்தில் இந்த அரசினுடைய

வருவாயிலிருந்து துவக்கப் பாடசாலைக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு ஒற்வொரு ஒன்றியத்திற்கும் நிதி வழங்கியுள்ளார்கள். அதுபோன்ற நிலையை இந்த நேரத்தில் நம்முடைய அரசு பின்பற்றுமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இதைவிட அதிகமான வருமானம் வந்துகொண்டிருந்தது. எனவே சில குறிப்பிட்ட காரியங்களுக்காக அவைகளை ஒதுக்க முடிந்தது. ஆனால் இப்போது பொதுவாகச் செய்யப்படுகின்ற அரசு நல திட்டங்களில் இந்தத் தொகையும் சேர்கின்றது.

'ஒக்கலிக கவுடர்' இனத்தை மிகவும் பின்தங்கியோர் பட்டியலில் சேர்த்தல்.

*6879 பேராசிரியர் க. பொன்னுசாமி :

திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாநிலத்தில் உள்ள 'ஒக்கலிக கவுடர்' இனத்தை மிகவும் பின்தங்கியோர் பட்டியலில் சேர்க்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

(அ) மாநிலத்தில் உள்ள 'ஒக்கலிக' கவுடர் இனத்தை மிகப் பின்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கும் செயற்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

பேராசிரியர் க. பொன்னுசாமி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள அந்த இனத்தைக் கருத்திற்கொண்டு ஆய்வு நடத்தி இதைச் சேர்ப்பதற்கு அரசு பரிந்துரைக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோருடைய நிலைமைகளை அறிந்து அவர்களுடைய முன்னேற்றத்திற்காகப் பரிந்துரைகளைச் செய்யுமாறு அமைக்கப்பட்ட இரண்டு குழுக்கள், முதலாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுவானாலும், அதற்குப் பிறகு அமைக்கப்பட்ட நலக் குழுவானாலும், அப்படிப்பட்ட ஒரு பரிந்துரையைச் செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.